[1982 மார்ச் 15

இராஜபாளையம் சங்கரன்கோவில் தாலுக்காக்களில் அனுமதியின்றி வெட்டி யெடுக்கப்பெறும் சுண்ணாம்புக் கற்கள்.

* வினா எண் 507. திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராஜபாளயம், சங்கரன்கோவில் தாலுக்காக்களில் முறையான குவாரி லைசென்ஸ் பெறாமல் பெரும்பாலானவர்கள் சுண்ணாம்புக்கற்கள் எடுத்து கள்ளத்தனமாக செம் தயாரிக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இதனால் ஆலங்குளம் அரசு சிமெண்ட் ஆலை பாதிக்கப்படும் சூழ்நிலையில் உள்ளதென்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இம்முறை தடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இராசபாளையம் தாலுக்காவில் முறையான குவாரி லைசென்ஸ் பெற்று மூன்று நிறுவனங்கள் 'செம்' பவுடர் தயாரிக்கிறார்கள். சுண்ணாம்புக்கற்கள் எடுப்பதற்கு இவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது. யாரும் கள்ளத்தனமாக செம் தயாரிக்கவில்லை. சங்கரன் கோயில் தாலுக்காவில் இருக்கும் ஒருவர் பந்தப்புளி கிராமத்தில் சுண்ணாம்புக் கல் எடுக்க குத்தகை பெற்று தொழிற்சாலை நிறுவியுள்ளார். தென்மலை கிராமத்தில் பட்டா நிலங்களில் சுண்ணாம்புக்கல் குவாரி செய்ய இராஜபாளையத்தில் உள்ள ஒரு 'செம்' தொழிற்சாலைக்கும் புளியங்குடியில் உள்ள கூட்டுறவு சங்கத்திற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. பந்தப்புளி கிராமத்தில் சுண்ணாம்புக்கல் அனுமதியின்றி குவாரி செய்துவருவது கவனத்திற்கு வந்தது. ஏற்கெனவே, மூன்று நபர்கள் மீது வழக்குப் போடப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை, தாசில்தார் ஆகியோர்களுக்கு இப்படி திருட்டுத்தனமாக அனுமதியின்றி எடுத்துச்செல்வோர் மீது நடவடிக்கை எடுக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

(ஆ) ஆலங்குளம் சிமெண்டு ஆலை பாதிக்கப்படும் சூழ்நிலையில் இல்லை.

(இ) இடம் இல்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புளியங்குடி கிராமத்தில் முறையாக லைசன்ஸ் பெற மனு போடப்பட்டு, இதுவரைக்கும் அவர்களுக்கு லைசன்ஸ்

வழங்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா? விரைவில் அவர்களுக்கு லைசன்ஸ் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருட்டுத்தனமாக சுண்ணாம்புக் கற்கள் எடுத்துக்கொண்டு போவது பற்றித்தான் கேள்வி. பல பேர்கள் மனு போட்டிருக்கிறார்கள். குறிப்பாக யாருடைய மனு என்று கேட்டால், அதற்கு பதில் சொல்ல முடியும், ஆனால், மொத்தம் வந்திருக்கக்கூடிய மனுக்கள், அவைகளின் தகுதிக் கேற்ப பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களுக்கு லைசன்ஸ் வழங்கப்படும்.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலை அரசே ஏற்று நடத்தினால், லாபகரமாக இருக்கும் என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே, இதை அரசே விரைவில் ஏற்று நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பரிசீலனை இப்போது ஏதும் இல்லை.

தருமபுரியில் நூற்பாலை ஏற்படுத்துதல்.

*வினா எண் 508— **திரு. எஸ். அரங்கநாதன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரியில் அரசு சார்பாக ஸ்பின்னிங் மில் ஏற்படுத்த செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். தர்மபுரி மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியில் 25,000 கதிர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவு நூற்பாலை சுமார் 7 கோடி அளவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 1982-83 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த ஆலை நிறுவப்பட்டு, சுமார் 1,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.